ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

எனது இல. :பிஎஸ்/சீஎஸ்ஏ/00/1/4/8 சுற்றறிக்கை இல. : **பிஎஸ்/சீஎஸ்ஏ/சுற்றறிக்கை/4/2023**

2023 பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி

பிரதம அமைச்சரின் செயலாளர்
அமைச்சரவையின் செயலாளர்
சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்
சகல மாகாணங்களினதும் பிரதம செயலாளர்கள்
பாராளுமன்ற செயலாளர் நாயகம்

**கடமைசார் வெளிநாட்டு சுற்றுப்பயணங்களுக்காக விமான சீட்டுக்களைக் கொள்வனவு செய்தல்**

தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார மற்றும் நிதிச் சிறமங்கள் காரணமாக அரச நிதியங்கள் அத்தியவசிய பணிகளுக்காக மாத்திரம் மிகச் சிக்கனமாக செலவு செய்யப்படல் வேண்டும்.

02. அதன் பிரகாரம், கடமைசார் வெளிநாட்டு சுற்றுப்பயணங்களுக்கான விமானச் சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்காக அரச நிதியங்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் கௌரவ பிரதம நீதியரசர், கௌரவ உயர்நீதிமன்ற நீதிபதிகள், கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் மற்றும் கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் தவிர்ந்த ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களும் சிக்கன வகுப்பு (Economy Class) விமானச் சீட்டுக்களை மாத்திரம் கொள்வனவு செய்தல் வேண்டுமென மாண்புமிகு சனாதிபதியவர்களின் ஆணைப்படி தயவுடன் அறியத் தருகின்றேன்.

03. எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு வணிக வகுப்பில் (Business Class) பிரயாணம் செய்யத் தேவையெனில், சிக்கன வகுப்பின் விமானச் சீட்டு ஒன்றை கொள்வனவு செய்வதற்குச் செலவாகும் தொகைக்கும் வணிக வகுப்பின் விமானச் சீட்டு ஒன்றை கொள்வனவு செய்வதற்குச் செலவாகும் தொகைக்கும் இடையிலான வித்தியாசத் தொகையினைத் தனது சொந்த பணத்திலிருந்து செலவுசெய்து வணிக வகுப்பில் பிரயாணம் செய்ய முடியும்.

04. எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு மேற்குறித்த ஏற்பாடுகளுக்கு புறம்பாக விசேட காரணத்துக்காக அரச நிதியத்தைப் பயன்படுத்தி வணிக வகுப்பில் பிரயாணம் செய்யத் தேவையெனில், அது தொடர்பான போதியளவு விடயங்களை முன்வைத்து எனது முன் அனுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

05. இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் 2023 மார்ச் மாதம் 01 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறுவதுடன் அதன் பிரகாரம் இந்த விடயம் தொடர்பில் இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் அல்லது அறிவுறுத்தல் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் அன்றைய திகதி முதல் வலுவிழக்கும்.

06. இது தொடர்பாக உங்களது அமைச்சு / மாகாண சபை / நிறுவனத்தின் கீழ் உள்ள சகல மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனத் தலைவர்களை அறிவூட்டுமாறு மேலும் அறியத் தருகின்றேன்.

**ஒப்பம் / ஈ எம் எஸ் பீ ஏக்கநாயக்க**
சனாதிபதியின் செயலாளர்

பிரதி : கணக்காய்வாளர் தலைமையதிபதி

ගාලු මුවදොර, කොළඹ 01 / காலி முகத்திடல், கொழும்பு 01 / Galle Face, Colombo 01
දුරකථන / தொலைபேசி / Telephones: +94 (0) 11 2354418, +94 (0) 11 2473873
ෆැක්ස් / தொலைநகல் / Fax: +94 11 2446657
ඊ-තැපෑල / மின்-அஞ்சல் / e-mail: prsec@presidentsoffice.lk